முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திரிகோணச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

23.04.2019, செவ்வாய்க்கிழமை

1. **தவயோக மூர்த்தியே அரங்கா**
**தன்னலம் கருதா சேவையாற்ற**
**அவணியோரை அழைத்து அருளும்**
**ஆறுமுக அரங்கமகா தேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
ஆசிபட **விகாரி தகரின் திங்கள்**
**அறிவிக்க தசதிகதி குசன் வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 10ம் நாள் 23.04.2019, செவ்வாய்க்கிழமை)**
3. வாரமதில் திரிகோணச்சித்தர் யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
பாரதமே தருமபலம் பெருகி
பண்பான ஆளுமைகள் உருவாக
4. உருவாகவே ஆறுமுக அரங்க ஞானி
உயர்வான சாத்வீக நெறியான
தரும வழிகளை உருவாக்கி
தன்னார்வ தொண்டை வளர்த்து
5. வளர்த்துமே உலக மக்களிடை
வள்ளல் நெறியை பதிவு செய்ய
தளர்வின்றி மக்களிடை மாற்றம்
தடையிலா தயவு நிலை பெருகி
6. பெருகியே உலக மக்களெல்லாம்
பேரானந்த ஞானகதி பெற்றும்
ஆறுமுகனார் அருளாசி கிட்டி
ஆளுமை திடம் ஞானவழி பெறுவர்
7. ஞானவான்களே ஆட்சியாளராக
நம்பகம்பட உருவாகி சிறப்பர்
தானதரும சிந்தை விரிவாகி
தரணியே தரும லோகம் ஆகும்
8. ஆகவே இயற்கை பாதுகாப்பும்
ஆபத்து ஆயுத வழி கலகமிலா
மிகைபட சமதர்ம சமத்துவ
மேலான சூழ்நிலைகள் உருவாகி
9. ஆகியே ஆறுமுகனார் சக்தியாக
அரங்கஞானி வழி அனைவருக்கும்
அகிலமெங்கும் ஆற்றல் கூடி
அணுகிடும் ஞானயுக மாற்றம்

10. மாற்றம் தர வந்த அரங்கன்
மகத்துவம் அறிந்து உணர்ந்து
ஆற்றல் பெற அணுகி வர
ஆசானிடம் திருவடி தீட்சை பெற

11. தீட்சை பெற கலிகால துன்பம் விலகும்
தீங்கில்லா ஞான வாழ்வாக
மாட்சிமை கூடி பாதுகாப்பு பெருகும்
மொழிந்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திரிகோணச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

யோக ஞான தவங்களுக்கெல்லாம் இவ்வுலகினில் தலைவனாக விளங்குகின்ற தவயோக மூர்த்தியே அரங்கமகா தேசிகனே தன்னலமற்று பொதுநலமாய் நடந்து உலக உயிர்களுக்கு சேவை செய்து இவ்வுலகினை காக்கவே உலக மக்களுக்கு அழைப்பு விடுத்து அவர்களை தயவு வழி நடத்தி தொண்டுகள் செய்திட செய்து பாவவினைகளிலிருந்து மீட்டு அருள் செய்திடும் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானசற்குருவே அற்புதங்கள் நிறைந்த உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 10ம் நாள் 23.04.2019, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே திரிகோணச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திரிகோணச்சித்தர்.

பாரத தேசத்தினில் தருமபலம் பெருகி பண்புள்ள ஆட்சியாளர்கள் ஆட்சி செய்ய வேண்டுமாயின் தருமத்தின் வழிதனிலே உலகை வழிநடத்தும் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியரின் உயர்வான சாத்வீகம் மிக்க நெறியான தருமத்தின் வழிகளை நாட்டினில் உருவாக்கி தாராளமாய் தருமங்களை செய்வதுடன் தன்னலம் மறந்து பொதுநலமாய் நடந்து தொண்டுகளை வளர்த்து நாட்டு மக்களிடையே வள்ளல் பெருமானின் சமரச சுத்த சன்மார்க்க நெறியினை, கொல்லா நெறியினை பரப்பி மக்களெல்லாம் கொல்லா நெறியை கடைப்பிடித்து வர, மக்களிடத்து நல்ல மாற்றங்கள் உருவாகி நாட்டினில் தயவுநிலை பெருகி நாட்டு மக்கள் எல்லாம் பேரானந்த ஞானகதியினை பெறுவார்கள். நாட்டு மக்களுக்கு முருகப்பெருமானின் அருளாசிகள் கிடைத்து நாட்டை ஆள்கின்ற ஆட்சியாளர்கள் நல்ல ஆட்சியாளர்களாக மாற்றம் பெறுவர். அவர்களும் ஞானம் பெற்று ஞானவழி ஆட்சி செய்கின்ற ஞானவான்களாக ஆகி சிறப்படைவார்கள்.

நாட்டை இனி ஞானவான்களே ஆட்சி செய்வர். அவர்கள் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகி உறுதியான நிலையை ஆட்சியை உருவாக்கி தானதரும சிந்தையும் பெருகி தானதருமங்கள் நாட்டினில் இனி விரிவாக்கம் அடைந்து உலக நாடுகளிற்கும் அது பரவி உலகமே தருமலோகமாக மாறும்.

உலகினில் தருமம் பெருகபெருக உலகிற்கு இயற்கையினால் பேரிடர்கள் நேராமல் இயற்கை பாதுகாப்பு உண்டாகும், ஆபத்துகள் உண்டாகாது, ஆயுதங்களைக் கொண்டு இனி கலகங்களோ, அழிவுகளோ நேராமல் தருமதேசங்கள் பாதுகாப்பு பெறும். உலகினில் சமதர்மமும் சமத்துவமும் அதிகமாகி அற்புதமான மேன்மைமிக்க சூழ்நிலைகள் உருவாகிடும். முருகப்பெருமானின் சக்திகள் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக உலக மக்களுக்கெல்லாம் கிடைத்து உலகமெலாம் முருகப்பெருமானின் ஆற்றல் பெருகி உலகினில் ஞானயுக மாற்றம் உருவாகிடும்.

**உலகினை மாற்றம் செய்து ஞானயுகமாக ஆக்கிடவே அவதாரமாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மகத்துவங்களை அறிந்து உணர்ந்து அவரவரும் அரங்கரிடத்து ஆற்றல் பெற்று கடைத்தேறிட அரங்கமகா தேசிகனாரை அணுகி தீட்சை உபதேசம் பெற வேண்டும். தீட்சை பெற்றவர்க்கு கலிகால துன்பம் எல்லாம் விலகிவிடும். அவர்களுக்கு தீங்குகள் ஏதும் இல்லாத ஞானவாழ்வு அமையும். அவர்களது வாழ்வு மேன்மையான வாழ்வாக பாதுகாப்பான வாழ்வாக அமையும்** எனக் கூறுகிறார் மகான் திரிகோணச்சித்தர்.

–சுபம்–